**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**S.T.C. No.36/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜாமணி | த–பெ | அய்யாகண்ணு |
| ஊர்: | : | அரியக்குடி | | |
| வயது: | : | 61/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ரியல் எஸ்டேட் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.01.2026**
**எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் அரியக்குடியில் வசித்து ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்து வருகிறேன். அசா1 எனது தங்கை. எனது தங்கைக்கு ஆண் மகன் மற்றும் பெண் பிள்ளை உள்ளது. அவரின் மகன் பெயர் விஜய். கடந்த 2016 ம் வருடம் ரகு என்பவர் எங்கள் வீட்டிற்கு வந்து எனது மருமகன் விஜய் என்பவரை வெளிநாட்டிற்கு அனுப்பி வேலைக்கு நியமனம் செய்து அதன் வாயிலாக வேலை பெற்று தருவதாக 80000 ரூபாய் பணத்தை கொடுக்குமாறு சொன்னார்கள். 2016 ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை ஒரு நாள் கருப்பையா என்பவர் வீட்டிற்கு சென்று நான் அசா1 மற்றும் அவரின் கணவர் ஆகியோர் அவரிடம் 80000 ரூபாய் கொடுத்தோம். பணம் கொடுத்த போது ரகுவின் தகப்பனார் கருப்பையா என்பவர் அங்கிருந்தார். அவரது மனைவியும் அங்கு இருந்தார் அவரின் பெயர் எனக்கு தெரியவில்லை. மூத்த சகோதரர் அங்கு இல்லை. இளையவர் அங்கு இருந்தார். நாங்கள் கொடுத்த பணத்திற்கு எழுதி கொடுக்குமாறு கேட்டதற்கு அவ்வாறு செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார்.

2. எனது மருமகன் விஜய் என்பவர் வெளிநாட்டிற்கு செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக ரகு என்பவர் எனது வீட்டிற்கு வந்து விஜய் 6 ம் வகுப்பு வரை தான் படித்திருக்கிறார் 8 ம் வகுப்பு படித்து முடித்த மாதிரி சான்றிதழ் வாங்க வேண்டும் என்று நடை பாஸ் வாங்க வேண்டும் என்றும் 20000 ரூபாய் எங்கள் வீட்டிற்கு வந்து பெற்று சென்றார். 2016 ம் வருடம் தேதி நினைவில் இல்லை ஒரு நாள் விஜய் துபாய்க்கு சென்று விட்டார். மூன்று மாதங்கள் கழித்து விஜய் என்பவர் எனக்கு போன் செய்தார். என்னிடம் பேசிய அவர் தன்னை வேலைக்கு அழைத்து சென்று வேலை எதுவும் கொடுக்கவில்லை என்றும் என்னை வெளியே விரட்டி விட்டார்கள் என்றும்

அங்கு இருக்கக்கூடிய கடைகளில் சாப்பிட்டு கொண்டிருப்பதாகவும் சொன்னார். மேலும் அவர் நான் உயிர் இழக்க போவதாக என்னிடம் சொன்னார்.

3. அதன் பிறகு நான் எனது தங்கை அசா1 ஐ அழைத்து சென்று தெற்கு காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி வேலைக்கு அழைத்து சென்று சம்பளம் கொடுக்கவில்லை சாப்பாடு கொடுக்கவில்லை போன்ற விபரங்களை சொல்லி நாங்கள் புகார் அளித்தோம். விஜய் என்பவரை இந்தியாவிற்கு வரவழைப்பதற்காக பின்னாளில் நாங்கள் தூதரகத்திற்கு தகவல் அனுப்பினோம். பின்னாளில் வெள்ளை கடவு சீட்டு வாயிலாக விஜய் என்பவரை இந்தியாவிற்கு தூதரகத்தின் வாயிலாக அனுப்பி வைத்தார். பின்னர் அவருக்கு திருமண ஏற்பாடு செய்து அவர் குடித்தனம் நடத்தி வந்தார். பின்னர் அவர் உடல் நிலை சரியில்லாத காரணத்தால் இறந்துவிட்டார். சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி விபரங்களை போலீசார் விசாரணையிலும் சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் இந்நீதிமன்றத்திற்கு சாட்சியாகவோ ஜாமீன்தாரராகவோ பல வழக்குகளுக்கு வந்துள்ளேன் என்றால் சரிதான். காரைக்குடி தெற்கு காவல் நிலையம் அடிக்கடி சென்று அங்கு பழக்கம் உடையவர் என்றால் சரியல்ல. புகாரை எழுதியது யார் என்றால் நான் தான் எழுதினேன். எனது மருமகன் விஜய் எனக்கு தகவல் சொன்னதன் அடிப்படையில் இந்த புகாரை எழுதினேன். அவ்வாறெனில் புகாரை நானே கொடுக்காமல் விஜயின் தாயாரை வைத்து ஏன் கொடுத்தேன் என்றால் தாயார் தான் கொடுக்க வேண்டும் என்பதற்காக தாயாரை வைத்து கொடுத்தேன். வெளிநாட்டில் என்ன என்ன நடந்தது என்ற விபரங்கள் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. எதிரி என்னிடம் வந்து பணம் கேட்டதாகவோ அந்த பணத்தை யார் யாருக்கு கொடுத்தேன் என்றோ கருப்பையா மற்றும் அவரின் மனைவி பணம் பெறும்போது இருந்ததாகவும் நான் பணம் கொடுத்தற்கு எழுதி கேட்டு அதை தர மறுத்ததாகவோ விஜய் 6ம் வகுப்பு வரை தான் படித்துள்ளார் 8 ம் வகுப்பு சான்றிதழ் வேண்டும் என்று கேட்டதாகவோ நடை பாஸ் மற்றும் சான்றிதழுக்காக கூடுதலாக 20000 ரூபாய் கேட்டதாகவோ மேலும் மூன்று மாதம் கழித்து விஜய் என்னிடம் பேசியதாகவோ அப்போது அவர் சாக போகிறேன் என்று கூறியதாகவோ விஜய் மற்றும் எதிரிகள் எனது வீட்டில் வைத்து போனில் பேசியதாகவோ நான் கொடுத்த புகாரிலோ அல்லது போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான் போலீசார் கேட்கவில்லை நான் சொல்லவில்லை.

2. மேற்படி விபரங்கள் மற்றும் பணம் கொடுத்த தேதி கூடுதல் பணம் கொடுத்த தேதி, திருப்பி வந்த தேதி, எனது மருமகன் என்னிடம் போனில் பேசிய தேதி ஆகியவை குறிப்பிட்டு தெரியுமா என்றால் தெரியாது நியாபகம் இல்லை. வெளிநாட்டில் நடந்த

விபரங்கள் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விஜய் என்பவர் போன் மூலம் சாக போகிறேன் என்று சொன்னவுடன் ஏன் பணம் அனுப்பி அவரை திரும்ப இந்தியாவிற்கு அழைத்து கொள்ளவில்லை என்றால் அவருடைய பாஸ்போட்டை எதிரிகள் வைத்து கொண்டதால் செய்யமுடியவில்லை. இது தொடர்பாக விஜய் சம்பளம் கொடுக்காததற்கோ பாஸ்போர்டை தர மறுப்பதற்கோ துபாய் நாட்டில் புகார் அளித்த விபரம் தெரியுமா என்றால் புகார் அளிக்க வில்லை.

3. எனது மருமகன் தான் வேலை எதுவும் செய்யமுடியாமல் வந்து விட்டார் என்றாலும் சம்பளமானது முழுமையாக கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. பணம் எதிரிகளின் வீட்டில் தான் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி வீடானது ஆறாவயல் காவல் நிலைய எல்லைக்குட்பட்டது என்றால் அந்த விபரம் தெரியாது. மேற்படி விபரத்தை வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. காரைக்குடி தெற்கு காவல் நிலையம் எனக்கு பழக்கமானது என்பதால் நானே ஒரு பொய்யான புகாரை கொடுத்து அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.20 17:40:07 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**S.T.C. No.36/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | விஜயாள் | க–பெ | சின்னக்கருப்பன் |
| ஊர்: | : | அரியக்குடி | | |
| வயது: | : | 55/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.01.2026**
**எதிரிகள் ஆஜர்.**
-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் அரியக்குடியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். எனது மகன் பெயர் விஜய். ஆஜர் எதிரிகளில் ரகு என்பவரை தெரியும். மற்ற நபரை தெரியாது. மேற்படி எதிரிகளின் தகப்பனாரைத் தெரியும். எனது மகன் விஜய் என்பவர் 8 ம் வகுப்பு வரை படித்திருந்தார். ஆஜர் எதிரிகளில் ரகு என்பவர் மூலமாக எனது மகன் விஜய் என்பவருக்கு துபாயில் விசா ஏற்பாடு செய்து வேலை பெற்று தருவதாக 2016 ம் வருடம் ரகு என்பவர் எங்களுக்கு உறுதி அளித்தார். அதன் அடிப்படையில் வேலைக்காக 80000 ரூபாய் ரொக்கமாக ரகு என்பவர் வீட்டில் நான் எனது அண்ணன் ராஜாமணி ஆகியோர் 2016 ம் வருடம் ஒரு நாள் கொடுத்தோம். பின்னர் எனது மகன் விஜய் துபாய்க்கு வேலைக்காக சென்று விட்டார். அங்கு சென்று 5 மாதங்கள் அவர் வேலை பார்த்தார். சம்பளம் ரூ.20000 என்று சொன்னார்கள். சம்பளம் கேட்டதற்கு கொடுக்கவில்லை என்றும் அடித்து விரட்டிவிட்டார்கள் என்றும் சொன்னார். ஒரு வருடம் கழித்து எனது மகன் இந்தியாவிற்கு வந்து விட்டார். இதன் இடையில் ரகு என்பவர் எங்கள் வீட்டிற்கு வந்து இரண்டு தவணைகளாக 10000 ரூபாயை எனது மகன் வேலைக்காக எங்களிடம் இருந்து பெற்று சென்றார்.

2. அதன் பிறகு இது தொடர்பாக எதிரிகளிடம் தகவல் கேட்பதற்காக தொடர்பு கொண்ட போது அவர்கள் எடுக்கவில்லை. அந்த வருடமே மேற்படி விபரம் குறித்து நடவடிக்கை எடுக்குமாறு காரைக்குடி தெற்கு காவல் நிலையம் சென்று நான் எனது அண்ணன் உடன் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் நான் கொடுத்த புகார் தான். **புகார் அசாஆ 1**.

குறுக்கு விசாரணை

1. புகாரை யார் எழுதியது என்றால் எனது அண்ணன் ராஜாமணி எழுதினார். எனது பையன் எந்த தேதியில் வெளிநாடு சென்றார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. புகாரிலும் வெளிநாடு சென்ற தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் எப்போது கொடுத்தோம் என்றால் எனது மகன் 5 மாதம் கழித்து காணவில்லை என்பதால் புகார் கொடுத்தோம். ஒரு வருடம் கழித்து தான் எனது மகன் வந்தார். மேற்படி காலக்கட்டத்தில் வெளிநாட்டில் என்ன நடந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். ரகு என்பவர் அவரது அண்ணனிடம் வேலைக்கு சேர்த்திருந்தார். அதன் பின்பு எனக்கு எந்த விபரமும் தெரியாது. எனது மகன் வேலை சரியாக பார்க்காமல் இருந்துள்ளார் பின்பு வேலை பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டு சென்று விட்டார் என்றால் சரியல்ல.

2. எனது மகன் எந்த தேதியில் இருந்து கடையில் இருந்து வெளியே சென்றார் பின்பு அவர் அங்கு என்ன செய்தார் போன்ற விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரிகளின் பெயர்கள் தெரியுமா என்றால் ரகு என்பவரை தெரியும் மற்றவரை தெரியாது. ஆஜர் எதிரிகளில் 1வது எதிரியின் பெயர் சொர்ணலிங்கம் 2 வது எதிரியின் பெயர் கருப்பு என்றால் சரிதான். புகாரில் இரண்டு எதிரிகளின் பெயர்களையும் தவறுதலாக தான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல என் மகன் சொன்ன பெயரை வைத்து தான் நான் புகார் அளித்தேன். சொந்த பெயர் என்ன என்று எனக்கு தெரியாது. இரண்டு எதிரிகளின் பெயரே தெரியாத நிலையில் தற்போது 1வது எதிரியை தெரியும் என்று போலீசார் அடையாளம் சொன்னதன் அடிப்படையில் தான் அடைளாயம் காண்பிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனது மகன் ஊரில் இருந்து வந்தபின்பு எனது மகனை அழைத்து கொண்டு சென்று போலீசாரிடம் வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் மூன்று முறை விசாரணை செய்தார்கள். எந்தவொரு வாக்குமூலமும் எனது மகன் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரியின் சொந்த ஊர் என்ன என்றால் பாப்பான்வயல். பாப்பான்வயலின் காவல் நிலையம் ஆறாவயல் என்று தெரியுமா என்றால் தெரியும். ஆறாவயல் காவல் நிலைய எல்லையில் நடந்த சம்பவத்திற்கு காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது தவறு என்றால் எனக்கு ஆறாவயல் காவல் நிலையம் தெரியாது காரைக்குடி காவல் நிலையம் தான் தெரியும் அதனால் காரைக்குடி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். பணத்தை எதிரியிடம் கொடுத்த தேதி தெரியுமா என்றால் என் மகன் வெளிநாடு செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எதிரிகள் வீட்டில் வைத்து எதிரிகளின் அப்பா, அம்மா, ரகு, ஆகிய மூவரையும் வைத்து தான் கொடுத்தேன்.

4. எனது மகன் வெளிநாடு செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எதிரிகள் வெளிநாட்டில் தான் இருந்தார்கள் தற்போது விபரங்களை வழக்கிற்காக பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. பணம் denamination தெரியுமா என்றால் அனைத்தும் 100 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன். எத்தனை நோட்டுகள் என்று தெரியுமா என்றால் தெரியாது. பணம் எவ்வாறு வந்தது என்பதற்காக ஆதாரங்கள் எதுவும் உள்ளதா என்றால் பல நபர்களிடம் கடன் வாங்கி பணம் சேர்த்தேன். எதிரிகள் எடுத்தது போலி விசா என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அரசிடம் அனுமதி பெறாத ஆவணம் மூலம் வெளிநாடு அழைத்து சென்றார்கள் என்பதற்கு எதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. துபாய் மாதிரியான இஸ்லாமிய நாடுகளில் விசா இல்லாமல் தங்கி இருந்தால் கடுமையான தண்டனை கிடைக்கும் என்றும் அதனால் எதிரிகள் முறையான விசா எடுத்து தான் அழைத்து சென்றார்கள் என்றும் எனது மகன் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளதால் எளிமையான வேலை கொடுக்கவில்லை என்பதற்காக அவராகவே திரும்பி வந்துவிட்டார் என்றால் சரியல்ல.

5. எனது மகன் வெளிநாட்டில் இருக்கும் வரை உரிய சம்பளம் பெற்று வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.20 17:40:16 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.